மாலை முரசு

பக்கங்கள் 20

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 29 திங்கட்கிழமை 18.12.2023 அதிர்வு 140


# சுகாதார அமைச்சின் முன்னாள் செயலர் சந்திரகுப்த கைது!

சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜனக ஸ்ரீசந்திரகுப்த கைது செய்யப்பட்டுள்ளார்.

தரமற்ற இம்யுனோக்ளோப்யுளின் மருந்து இறக்குமதி தொடர்பில் 04▶



# திருகோணமலையில் கூடிய தமிழ் அரசின் அரசியல் குழு

(அப்துல்சலாம் யாசீம்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளைப் பணிமனையில் இன்று நடைபெற்றது.

தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் எதிர் வரும் ஜனவரி மாதம் 28 ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ள கட்சியின் 17 ஆவது தேசிய மாநாடு தொடர்பிலும், அதையொட்டி நடை பெறவுள்ள பொதுக் கூட்டம் தொடர் பிலும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் மாநாட்டுக்கான 04▶

# தமிழ் அரசின் தேசிய மாநாடு திட்டமிட்டபடி ஜனவரி 27 இல்

## அதே மாதம் 21 இல் பொதுச் சபை கூடி புதிய தலைவரைத் தெரிவு செய்ய முடிவு



(அப்துல்சலாம் யாசீம்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி யின் தேசிய மாநாடு திருகோண மலையில் திட்டமிட்டபடி இடம் பெறும் என்று கட்சியின் பேச்சாள ரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் திரு கோணமலை மாவட்டக் கிளை யில் இன்று நடைபெற்ற அரசியல் குழுக் கூட்டத்தின் பின்னர் ஊட கங்களுக்குக் கருத்துத் தெரிவிக் கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "யாப்பின் அடிப்படையில் திரு கோணமலை மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடு நடைபெற இருப்பதால் விழாக் குழுவாகக் கட்சியின் திருகோண மலை மாவட்டக் கிளை செயற்பட்டு வருகின்றது. 04▶

# நேற்று கைதான இந்திய மீனவர்கள் மீதும் கடற்படையினர் வெறியாட்டம்

## இருவர் காயங்களுடன் வைத்தியசாலையில்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், காரைநகர் கடற் பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடி யில் ஈடுபட்ட வேளை கைது செய்யப் பட்ட 14 இந்திய மீனவர்களில் இரு வர் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள னர்.

காரைநகர் கடற்பரப்புக்குள் 04▶

# அவசர உதவிகளை வழங்கக் கோரிக்கை

(ந.லோகதயாளன்)

கன மழை காரணமாகப் பாதிக் கப்படும் மக்களுக்குத் தேவையான அவசர உதவிகளை வழங்க முன்வருமாறு முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். 04▶

# வடக்கில் கொட்டித் தீர்க்கும் மழையால் இன்று 26 பாடசாலைகள் இயங்கவில்லை





(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் கொட்டித் தீர்க்கும் மழை காரணமாக இன்று 26 பாடசாலைகள் இயங்கவில்லை.

வடக்கில் தொடரும் கனமழை யால் பல பாடசாலைகள் இடைத் தங்கல் முகாம்களாகவும், மேலும் சில பாடசாலைகள் நீரினால் சூழப்பட்டமையாலும் இயங்க முடி யாத நிலை காணப்படுகின்றது.

இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் 8 பாடசாலைகளும், கிளிநொச்சி மாவட்டத்தில் 7 பாட சாலைகளும், மன்னார் மாவட்டத் தில் 2 பாடசாலைகளும், வவுனியா மாவட்டத்தில் 9 பாடசாலைகளும் இன்று கற்றல் செயற்பாடுகளுக் காக இயங்கவில்லை என்று 04▶



# இடைவிடாது தொடர்கிறது மழை! வெள்ளத்தில் தத்தளிக்கும் மக்கள்!!

## முல்லைத்தீவில் 1,126 குடும்பங்களைச் சேர்ந்த 3,463 பேர் பாதிப்பு!

(சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் இடைவிடாது பெய்துவரும் கனமழை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள அனைத்து குளங்களும் முற்று முழுதாக நிறைந்து வான் பாய்கின்ற நிலையில் பல்வேறு பகுதிகள் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

முத்துஐயன்கட்டுக்குளம் 4 வான் கதவுகளும் திறக்கப்பட்டுள்ளன. முத்துயன்கட்டு, பேராறு, முத்துவிநாயகபுரம், பண்டாரவன்னி, வசந்தபுரம், மன்னகண்டல் ஆகிய கிராம மக்களை மிக அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, புதுக்குடியிருப்பு – ஒட்டுசுட்டான் வீதியில் மன்னாகண்டல் பகுதியில் வெள்ளநீர் வீதியை குறுக்கறுத்து பாய்வதால் வீதி போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளது. மதவளசிங்கன் குளம் இரண்டு அடி வான் பாய்கிறது. இதனால் பூதன்வயல், கணுக்கேணி கிழக்கு, முறிப்ப பகுதி மக்கள் அவதானமாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று தண்ணிமுறிப்பு குளத்தின் கீழ் பகுதியில் உள்ள மக்களும் அவதானமாக இருக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைவிட வட்டுவாகல் பாலத்தில் சேதம் ஏற்ப்பட்டுள்ளமையால் மக்களை அவதானமாகப் பயணிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதனைவிட வவுனிக்குளம் வான் பாய்வதால் மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. பாலியாறு பெருக்கெடுத்து பாய்வதால் சிறாட்டிகுளம் மக்கள் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் ஆலங்குளம் கொக்காவில் வீதியில் மருதங்குளம் ஐயன்கன்குளம் வான் பாய்வதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் புளியமுனை விவசாய நிலங்களுக்கு மக்கள் செல்ல முடியாது வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ள நிலையில் படகு சேவை மூலம் மக்கள் விவசாய நிலங்களுக்கு சென்று வருகின்றனர்.

மழை தொடர்ந்து பெய்துவருகின்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் கடுமையான பாதிப்புக்களை சந்தித்துள்ளனர்.

இதேவேளை நேற்று (17) மாலை 4 மணி வரையான தகவல் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் அம்பாள்புரம், கரும்புள்ளியான், ஒட்டறுத்தகுளம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், செல்வபுரம், பாலிநகர், சிராட்டிகுளம், சிவபுரம், மூன்றுமுறிப்பு, பூவரசங்குளம், விநாயகபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 284 குடும்பங்களை சேர்ந்த 946 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் மாங்குளம், பனிக்கன்குளம், பண்டாரவன்னி, இந்துபுரம், தட்டையர்மலை, புளியங்குளம், தச்சடம்பன், கூழாமுறிப்பு , கனகரத்தினபுரம், காதலியர் சமனங்குளம் ,தண்டுவான், ஒட்டுசுட்டான்,பழம்பாசி ,பேராறு , மணவாளன்பட்டமுறிப்பு , கணேசபுரம், கரஉவஏலன்கண்டல் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 216 குடும்பங்களை சேர்ந்த 696 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கள்ளப்பாடு, சிலாவத்தை, செல்வபுரம், வற்றாப்பளை, தண்ணிமுறிப்பு, முள்ளியவளை தெற்கு, கள்ளப்பாடு வடக்கு, கள்ளப்பாடு தெற்கு ,கொக்கிளாய் வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 93 குடும்பங்களை சேர்ந்த 332 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் அணிஞ்சியன் குளம், உயிலங்குளம், தென்னியங்குளம், கோட்டைகட்டிய குளம், ஆலங்குளம், தேராங்கண்டல், கல்விளான், மல்லாவி,யோகபுரம் கிழக்கு, புகழேந்தி நகர், பாரதிநகர், யோகபுரம் மேற்கு, அம்பலப்பெருமாள்குளம் , அமைதிபுரம், புத்துவெட்டுவான், பழையமுறிகண்டி, ஐயன்கன்குளம், துணுக்காய், யோகபுரம் மத்தி, திருநகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 237 குடும்பங்களை சேர்ந்த 732 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேபோன்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலர்கள் பிரிவில் புதுக்குடியிருப்பு மேற்கு, தேவிபுரம், மாணிக்கபுரம்,உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு மற்றும் வள்ளிபுனம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 296 குடும்பங்களை சேர்ந்த 767 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மொத்தமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 1126 குடும்பங்களை சேர்ந்த 3463 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ பிரிவின் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட புளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 5 குடும்பங்களை சேர்ந்த 21 பேரும் பண்டாரவன்னி கிராம அலுவலர் பிரிவில் 63 குடும்பங்களை சேர்ந்த 201 பேருமாக 68 குடும்பங்களை சேர்ந்த 222 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு பிரதேச செயலர், உதவி பிரதேச செயலர், பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஊழியர்கள், கிராம அலுவலர்கள், கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் மக்களுக்கான சமைத்த உணவு மற்றும் அத்தியாவசிய தேவைகளை ஏற்பாடு செய்து வழங்கி வருகின்றனர்.




# இலங்கை பட்டயக் கணக்காளர் கிரிக்கெட்டும் கௌரவிப்பும்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவர்களுக்கு இடையிலான ஒன்று கூடலும் கிரிக்கெட் களியாட்டமும், அங்கத்தவர் கௌரவிப்பும் கொழும்பு தேஸ்டன் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றன.

நிறுவனத்தின் தலைவர் சஞ்சய பண்டார பிரதம அதிதியாக கலந்து கொண்ட நிகழ்வில் உப தலைவர் ஹெஸான குறுப், குழு உறுப்பினர்களான சாமர அபேரெட்ண, சமன் ஸ்ரீலால், பதில் தலைவர் லக்மாலி பிரியங்கனி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.24 குழுக்கள் நட்பு ரீதியான பங் கேற்ற கிரிக்கெட் நிகழ்வில் திறமைகளை வெளிக்காட்டிய பலர் கௌரவிக்கப்பட்டனர்





# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## திருகோணமலையில்...

முன் ஆயத்தங்களைச் செய்வதற்கும் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கும் திருகோணமலை மாவட்டக் கிளைத் தலைவர் எஸ். குகதாசன் தலைமையில் ஒன்பது பேர் கொண்ட ஏற்பாட்டுக் குழுவும் அமைக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் அரசியல் குழுவில் உள்ள மாவை சேனாதிராஜா, எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன், ப.சத்தியலிங்கம், த.கலையரசன், சேவியர் குலநாயகம், சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் கலந்துகொண்டனர். அரசியல் குழுவில் உள்ள இரா.சம்பந்தன், கே.வி.தவராசா ஆகியோர் பங்கேற்கவில்லை. சம்பந்தன் சுகவீனம் காரணமாகவும், தவராசா சிங்கப்பூர் சென்றமையாலும் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

கட்சியின் பொருளாளர் கனக சபாபதி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ளஸ் நிர்மலநாதன், இரா. சாணக்கியன் ஆகியோரும் இன்றைய கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கலந்துகொள்ளவில்லை.

திருகோணமலை மாவட்டக் குழுவே கட்சியின் தேசிய மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவாகச் செயற்படுகின்றது என்பதால், எஸ்.குகதாசன் தலைமையிலான மாவட்டக் குழுவும் அழைப்புக்கிணங்க இன்றைய அரசியல் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டது.

## நேற்று கைதான...

நேற்று மாலை எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் 14 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 12 பேர் யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் இன்று கையளிக்கப்பட்டனர். ஏனைய இருவரும் காயமடைந்த நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கடற்படையினர் இரும்புக் கம்பியால் தங்கள் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என்று காயமடைந்த இரு மீனவர்களும் தெரிவித்தனர்.

கைதான இந்திய மீனவர்களை ஊர்காவற்றுறை நீதிவான் முன்னிலையில் இன்று ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பருத்தித்துறை கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்கள் மீதும் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் சிலர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அவசர உதவிகளை...

வடக்கில் நிலவும் சீரற்ற காலநிலையால் தொடர் மழை நீடிக்கின்றது. இதனால் சகல குளங்களும் நிரம்பி வழிவதோடு கட்டுக்கடங்காத வெள்ளம் பாய்வதால் மக்கள் பலர் இடம்பெயரும் அதேநேரம் மேலும் பலர் வீடுகளிலேயே சிரமத்தின் மத்தியில் தங்கியுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசின் அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் ஊடாக சமைத்த உணவு வழங்கினாலும் ஏனைய உதவிகள் கிடைக்கவில்லை.

இதில் மிக முக்கியமாக போர்வைகள், நுளம்பு வலைகள், அடிப்படை மருந்துகள், நில விரிப்புக்கள், பாய் போன்றனவே மிகவும் முக்கியமாகக் காணப்படுகின்றன.

இவ்வாறான பொருள்களை வழங்க முன்வருவோர் நேரடியாகவோ அல்லது பிரதேச செயலாளர்கள் ஊடாகவோ வழங்கி உதவுமாறு முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சுகாதார அமைச்சின்...

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் இன்று அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மூன்றாவது தடவையாக இன்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னிலையாகியிருந்த நிலையில், அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான அவர், மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

முன்னதாக கடந்த 30ஆம் திகதி இரண்டாவது முறையாக அவர் 4 மணித்தியாலங்கள் சி.ஐ.டியில் அவர் வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

இதேவேளை, தரமற்ற இம்யுனோக் ளோப்யுளின் மருந்து இறக்குமதி செய்த குற்றச்சாட்டில் சுகாதார அமைச்சின் மருந்து வழங்கல் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் கபில விக்கிரமநாயக்க உள்ளிட்ட 4 பேர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் கொட்டித் தீர்த்த...

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வடக்கில் தொடர்ந்தும் அதிக மழை பொழிவதால் நாளை மேலும் பல பாடசாலைகள் இயங்க முடியாமல் பாதிப்படையக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## தமிழ் அரசின்...

இதனடிப்படையில் எதிர்வரும் 2024 ஜனவரி 21 ஆம் திகதி பொதுச் சபை கூடி புதிய தலைவர் மற்றும் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெறவுள்ளது. 26ஆம் திகதி மத்திய செயற்குழு கூடவுள்ளது. 27 ஆம் திகதி பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது. 28 ஆம் திகதி தமிழ் அரசுக் கட்சியின் 17 ஆவது தேசிய மாநாடு இடம்பெறவுள்ளது.

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பிரதிநிதித்துவம் குறைவாக உள்ளது எனவும், பிரதேச ரீதியாக பிரதிநிதித்துவத்தைக் கூட்டுவது எனவும் இன்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் திருகோணமலையைப் பொறுத்தவரை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்த சில கருத்துக்களுக்கு அமைவாக மேலதிகமாக ஆறு உறுப்பினர்களைத் தெரிவு செய்ய மாவட்டக் கிளைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது." - என்றார்.









# விபத்தில் சேதமடைந்த சுமைதாங்கி மீண்டும் அதே இடத்தில் அமைப்பு!

**(த.சுபேசன்)**

சாவகச்சேரி நுணாவில் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னராக விபத்தில் முற்றாக அழிவடைந்த சுமை தாங்கியை தொல்லியல் திணைக்களம் அதே இடத்தில் மீள நிர்மாணித்துள்ளது.

சாவகச்சேரி – நுணாவில் பகுதியில் ஏ-9 பிரதான வீதியில் தொல்லியல் திணைக்களத்தால் மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தி பராமரிக்கப்பட்டு வந்த சுமைதாங்கி மீது எரிபொருள்தாங்கி ஒன்று மோதி விபத்துக்குஉள்ளானதில் பாரம்பரிய சுமைதாங்கி முற்றாக அழிவடைந்திருந்தது.

இந்த நிலையில் அந்தச் சுமைதாங்கி தொல்லியல் திணைக்களத்தால் மீளப் புனரமைக்கப்பட்டுள்ளது.

மீள சுமைதாங்கியைப் புனரமைக்கும் பணிகள் யாழ். மாவட்ட தொல்லியல் திணைக்கள புனரமைப்பு அலுவலர் ச.தஸீந்தன், பராமரிப்பு மேற்பார்வை அலுவலர் மா. மதிமாறன், வலய அலுவலர் திருமதி ச.நிலாஜினி ஆகியோரது மேற்பார்வையின் கீழ் நடைபெற்றிருந்தது.

இவர்களுடன் உதயஶ்ரீ, லால் விக்கிரம சிங்க, மற்றும் லலித் பண்டுப்பிரிய ஆகியார் பங்குபற்றியிருந்தனர்.

விபத்தால் அழிவடைந்த மரபுரிமைச் சின்னத்தை மீள அமைத்த செயற்பாட்டுக்கு பலரும் தமது பாராட்டுக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

சுமைதாங்கி அருகே பாரம்பரிய இளப்பாறு மடம் ஒன்றும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# குச்சவெளி பிரதேசத்தில் பன்னல் தாவரங்கள் நடல்

**(எஸ்.கீதபொன்கலன்)**

சுற்றாடல் பாதுகாப்பை நோக்காகக் கொண்டு திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலர் பிரிவில் உள்ள கும்புறுபிட்டி சின்னக்கரைச்சி களப்பு பகுதியில் 1500 பன்னல் தாவரங்கள் நடப்பட்டது.

திருகோணமலை றோட்டறிக் கழகத்தால் மேற்கொள்ளப்படும் சமூக செயற்றிட்டத்தின் கீழ், மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளின் றோட்டறிக் கழகங்களின் நிதி அனுசரணையுடன் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இன்றைய முதற்கட்ட தாவர நடுகை நிகழ்வில் குச்சவெளி பிரதேச செயலர் ஏ.குணநாதன் முதன்மை அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

பிரதேசத்தின் கிராமிய சமூக அமைப்பு பிரதிநிதிகளுடன், திருகோணமலை றோட்டறிக் கழக நிர்வாகிகளும் நிகழ்வில் கலந்து கொண்டு தாவரங்களை நட்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## பொலிஸ் மா அதிபர் பற்றிய குழப்பம்

பொலிஸ்மா அதிபர் நியமனத்தினால் குழப்பத்தின் உச்சத்தில் ஆழ்ந்திருக்கின்றது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசு.

முன்னைய பொலிஸ்மா அதிபர் ஸி.டி.விக்ரமரத்ன ஓய்வு பெறும் போதே குழப்பங்கள் ஆரம்பித்து விட்டன.

அவரின் இடத்துக்கு தேசபந்து தென்னக்கோனைப் புதிய பொலிஸ்மா அதிபராக நியமிக்க வேண்டும் என்ற அழுத்தம் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸினால் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வந்தது. ஆனால் அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆரம்பத்தில் இணங்கவில்லை. தேசபந்து தென்னக்கோனுக்கு எதிரான முறைப்பாடுகள், குற்றச்சாட்டுகள், பழைய நடவடிக்கைகள் தொடர்பான பதிவுகள், வழக்குகள் என்று பல விடயங்கள் நிலுவையில் இருந்தமையால் பொலிஸ் சேவையில் சிரேஷ்ட தரத்தில் - அடுத்த நிலையில் - அவர் இருந்தும், அவருக்கு அந்தப் பதவி நிலையை வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பின்னடித்தார். ஓய்வு பெற்று செல்ல வேண்டிய பழைய பொலிஸ்மா அதிபருக்கு குறுகிய கால பதவி நீடிப்புகளைத் தொடர்ந்து வழங்கி அவரை ஆறு மாத காலம் பதவியில் தொடர வைத்திருந்தார்.

அரசமைப்புக் கவுன்ஸிலின் முடிவை மீறி இப்படி பழையவருக்கு சேவை நீடிப்பு வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்தமைக்கு காரணம் தேசபந்து தென்னக்கோன் பற்றிய பொதுவான கருத்து நிலைப்பாடுதான்.

கடைசியில் வேறு வழியுன்றி அவரை அப்பதவிக்கு நியமிக்க நடவடிக்கை எடுத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஆனாலும் அவருக்குப் பொலிஸ்மா அதிபர் பதவியை வழங்காமல் தற்காலிகமாக அதனை வழங்குவது போல பதில் பொலிஸ்மா அதிபர் பதவியைத்தான் பரிந்துரைத்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அப்படி நியமித்தமைக்காக இப்போது வாங்கி கட்டுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

பதில் பொலிஸ்மா அதிபர் பதவியை தேசபந்து தென்னக்கோன் பொறுப்பேற்ற கையோடு அவருக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றில் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது.

சில ஆண்டுகளுக்கு முன்னர் மிரிஹான பொலிஸ் நிலையம் தேசபந்து தென்னக்கோனின் கீழ் நேரடியாக இருந்தபோது முன்னாள் படை வீரர் ஒருவரை அங்கு வைத்து மோசமாகச் சித்திரவதை செய்தார் என்று தேசபந்து தென்னகோனுக்கும் மற்றும் மூன்று பொலிஸ் அதிகாரிகளுக்கும் எதிராக உயர்நீதிமன்றம் குற்றம் கண்டிருக்கின்றது. நான்கு பொலிஸ் அதிகாரிகளும் அந்த முன்னாள் படை வீரருக்கு தாங்கள் இழைத்த சித்திரவதைக்காக தலா 5 லட்சம் ரூபா நஷ்ட ஈடாகச் செலுத்த வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மேன்முறையீடு இல்லை. அதுவே முடிவான தீர்ப்பு. அத்தகைய சித்திரவதைக் குற்றத்தை இழைத்தவர் என்று நிரூபிக்கப்பட்டவரை பதில் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமித்து, அதில் தொடர அனுமதித்தமைக்காக அரசமைப்பு கவுன்ஸில் மற்றும் ஜனாதிபதிக்கு எதிராக கடும் கண்டனங்கள் சட்ட அமைப்புகளினால் முன்வைக்கப்படுகின்றன.

தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராகப் பல வழக்குகள் நிலுவையில் உள்ளன. அத்தகையவரை பொலிஸ் உயர் பதவிக்கு நியமித்தமை எங்ஙனம் என்று 'சட்டத்தரணிகள் ஒன்றிப்பு' அமைப்புக் கேள்வி எழுப்பி உள்ளது.

தேசபந்து தென்னக்கோனும் மற்றும் மூன்று பொலிஸ் அதிகாரிகளும் உயர் நீதிமன்றத்தினால் சித்திரவதைக் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டு இருக்கின்றமையால் அந்த நால்வருக்கும் எதிராக சித்திரவதைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் குற்ற வழக்குத் தொடர வேண்டுமென இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி உப்புல் ஜயசூரிய கூறுகின்றார்.

ஜனாதிபதி பரிந்துரைத்த இந்த நபருக்கு பதில் பொலிஸ்மா அதிபர் நியமனத்தை அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரித்தமை எங்ஙனம் என்று சட்டவிற்பன்னர் பேராசிரியர் சாவித்திரி குணசேகரா கேள்வி எழுப்பி உள்ளார்.

இவ்விடயத்தில் மக்களின் நம்பிக்கையை நிலை நிறுத்த அரசமைப்புக் கவுன்ஸில் மற்றும் ஜனாதிபதி தரப்பு காத்திரமாக உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறப்படுகின்றது. அவர்கள் எடுக்கப் போகின்ற நடவடிக்கை என்ன?

# பனிக்கட்டியாவ குளம் திறந்து வைப்பு!

(ஹஸ்பர்)

மீள்புனரமைக்கப்பட்ட மகா பனிக்கட்டியாவ குளத்தை மக்கள் பாவனைக்கு கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் கையளித்தார்.

37.45 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் குளம் திருகோணமலை மாவட்ட விவசாயிகளுக்குக் கணிசமான நன்மைகளை வழங்கும் வகையிலும் விவசாய பாவனைக்கான நீர் வினைத் திறனை மேம்படுத்தும் வகையிலும் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரல கலந்துகொண்டார்.





# மட்டக்களப்புக்குப் புதிய அரச அதிபர்; இன்று கடமைகளைப் பொறுப்பேற்றார்!

(அபு அலா )

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக திருமதி ஜே.ஜே.முரளிதரன் இன்று (18) தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்கள், உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளராகக் கடமையேற்பு!

(அபு அலா )

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பதில் செயலாளராக மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் பொறியாளர் என்.சிவலிங்கம் நியமிக்கப்பட்டு அவருக்கான கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் இன்று (18) வழங்கினார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு, கிழக்கு மாகாண ஆளுநரால் இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.





## மூத்த ஊடகவியலாளர் மருதமுனை காதர் காலமானார்

அஸ்ஹர் இப்றாஹிம்)

சிரேஷ்ட ஊடகவியலாளர் மருதமுனையைச் சேர்ந்த பீ.எம்.எம்.ஏ.காதர் இன்று திங்கட்கிழமை காலமானார்.

மூன்று தசாப்தங்களாக இலங்கையிலுள்ள தேசிய பத்திரிகைகளில் பிராந்திய செய்தியாளராக கடமையாற்றிய இவர் சிறந்ததொரு இலக்கியவாதியுமாவார்.

# போதைப்பொருள் தொடர்பான தகவலை பொதுமக்கள் பயமின்றி வழங்குங்கள்!

### பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம தெரிவிப்பு

(பாறுக் ஷிஹான்)

பொதைப் பொருள்கள் வியாபாரம் தொடர்பான விவரங்களைப் பொது மக்கள் பயமின்றி பொலிஸாருக்கு வழங்க முடியும்.

இவ்வாறு பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம தெரிவித்துள்ளார்.

விசேட போதை பொருள் ஒழிப்பு திட்டத்தை அமுல்படுத்தும் வகையில் பதில் பொலிஸ் மா அதிபர் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அப்பணிப்பின் கீழ் விசேட போதை பொருள் ஒழிப்பு குழு ஒன்றை அமைத்து அக் குழுவின் ஊடாக பொது மக்களுக்கு விழிப்பூட்டல்களை வழங்கவும் போதைப் பொருளுடன் தொடர்புடைய நபர்களை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுப்பதற்குமான கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை மாலை சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம்.என் ஜயபத்ம இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். போதைப்பொருள் தொடர்பில் உறுதியான தகவல்களை பொலிஸாருக்கு வழங்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் பள்ளிவாசல் நிர்வாகிகள், அரச உத்தியோகத்தர்கள், பொலிஸ் ஆலோசனைக் குழுவினர், சமூக சேவகர்கள் என பலரும் கலந்து கொண்டு தத்தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.



# தொழில் முயற்சியாண்மை செயலமர்வில் பங்குபற்றிய இளையோருக்குச் சான்றிதழ்

(எம்.ஏ.ஏ.அக்தார், நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தொழில் தேடும் இளைஞர், யுவதிகள் தொழில் முயற்சியாண்மை செயலமர்வில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கிழக்கு நற்புறவு ஒன்றியம் மற்றும் சொப்டா கெயார் நிறுவனத்தின் அனுசரணையில் பிரதேச செயலர் எம்.எம். ஆசிக் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொறியியலாளரும் சொப்டா கெயார் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளரும் கிழக்கு நற்புறவு ஒன்றியத்தின் தவிசாளருமான பொறியியலாளர் எம்.எம்.நசீர், பிரதேச செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், இயபோ நிறுவன பிரதி தவிசாளர் எம்.எம். ஜுனைதீன், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.சி. முஹம்மட், ஓய்வு பெற்ற பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.எம்.சமூன், திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எம்.கஸ்ஸாலி, மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.தால்சுறூன், இளைஞர் சேவை உத்தியோகத்தர் எம்.எம்.ஷமீலுல் இலாஹி உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சாவகச்சேரி மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

(த.சுபேசன்)

பிரீத்தி பவுண்டேசன் அமைப்பின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மனித நேய செயற்பாட்டாளர் பிரீத்தியின் பிறந்தநாள் அன்பளிப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட உதயசூரியன் மற்றும் மகிழங்கேணி கிராமங்களை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 30 மாணவர்களுக்குத் தலதத 5 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

எதிர்காலத்தில் சிறுவர்கள் மத்தியில் பசுமையான சூழலை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மரக்கன்றுகளும் பிரீத்தி பவுண்டேசன் செயற்பாட்டாளர்களால் வழங்கப்பட்டன.




# மனித உரிமை தினத்தை முன்னிட்டு கல்முனையில் வழிகாட்டல் கருத்தரங்கு

(பாறுக் ஷிஹான்)

டிசெம்பர் மாதம் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமை தினமாகும். இதனை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய அலுவலகம் நிகழ்வு ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

நாளை 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் இந்த நிகழ்வு கல்முனை உப பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பல்வேறு திணைக்கள உயரதிகாரிகள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் சிவில் அமைப்புக்கள் என்பன கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் மனித உரிமைகள் பற்றிய விடயங்களையும், ஆணைக்குழுவின் பொது வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பான விழிப்பூட்டல்கள் வழங்கப்படவுள்ளன.

இது தவிர மனித உரிமை பாதுகாவலர் வழிகாட்டுதல், விசேட தேவையுடையவர் தொடர்பான சுற்றுநிருபம், உள நல நிறுவனத்தின் உண்மையைக் கண்டறிதல், தடுப்பு காவலில் இறத்தல், சட்டவிரோத கொலைகள், சம்பந்தமாக கலந்துரையாடல் விரிவாக இடம்பெறவுள்ளது.



# ஊழல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு 'ஸ்டிக்கர்' ஒட்டி விழிப்புணர்வு நிகழ்வு

(எஸ்.கீதபொன்கலன், ஹஸ்பர்)

சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட செயலகத்தில் 'ஸ்டிக்கர்' ஒட்டும் செயற்பாடு திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் இடம்பெற்றது.

டிசெம்பர் 09 முதல் டிசம்பர் 15 வரை சர்வதேச ஊழல் எதிர்ப்பு வாரமாகக் கடைப்பிடிக்கப்பட்டது.

உலகம் முழுவதும் ஊழலை ஒழிக் கும் நோக்கத்திற்காக டிசெம்பர் 09 ஆம் திகதி சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினமாக கடைப்பிடிக்கப்படு கிறது.

கடந்த 2003 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினமாக அறிவிக்கப்பட்டது.

லஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்ப தோடு, ஊழலை ஒழிப்பதும், பொது



மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்து வதுமே ஊழல் எதிர்ப்பு தினத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.சுதாகரன் , பிரதம கணக்காளர் எஸ்.பரமேஸ்வரன், நிர்வாக உத்தியோ கத்தர் எஸ்.ஆர்.கே.எஸ். குருகுலசூரிய, மாவட்ட செயலக அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






# பருவ மழை தீவிரமடைந்துள்ளதால் அனர்த்தம் தொடர்பில் கலந்துரையாடல்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந் துள்ளதால் ஏற்படும் அனர்த்த நிலை மைகளை கையாள்வது தொடர்பான விசேட அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டம் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தலைமையில் நுவரெ லியா மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

பருவமழையுடன் ஏற்படக் கூடிய அனர்த்த நிலைமைகளுக்கு நிறுவ னங்களைத் தயார்படுத்துவதற்கும், நிறுவனங்களின் செயற்பாடு மற்றும் ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துவதற் கும், நுவரெலியா மாவட்டத்தில் ஏற்படக் கூடிய அனர்த்தங்கள் தொடர்பில் விழிப் புணர்வை ஏற்படுத்துவது தொடர்பில் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நுவரெலியா மாவட்ட அனர்த்த முகா மைத்துவப் பிரிவு உதவிப் பணிப் பாளர் நிமல்பண்டார, நுவரெலியா, வலப்பனை, ஹங்குரான்கெத்த, கொத் மலை, தல வாக்கலை, நோர்வூட், அம்பக முவ பிர தேச செயலர்கள், அரச அதிகாரிகள்மற் றும்பலர்இந்தநிகழ்வில்கலந்துகொண்டனர்.



# பழுகாமத்தில் கலப்பின மிளகாய் அறுவடை!

(வி.ரி.சகாதேவராஜா)



விவசாய திணைக்களத்தால் வழங்கப்பட்ட கலப்பின மிளகாய் செய்கையின் அறுவடை விழா பழுகாமம் விவசாய போதனாசிரியர் பிரிவுகளுக்குட்பட்ட பொறுகாமம் கிராமத்தில் இடம்பெற்றது.

பழுகாமம் விவசாய போதனாசிரியர் பிரிவுக்கு பொறுப்பான விவசாய போதனாசிரியர் திருமதி துஷ்யந்தி ஜதீஸன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் வீ.பேரின்பராஜா தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் எஸ். சித்திரவேல், விவசாய போதனாசிரியர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் விவசாய பயிலுனர்கள் மற்றும் விவசாயிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் ககலப்பின மிளகாய் வர்க்கம் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு செத்தல் மிளகாய் உற்பத்தியை ஊக்குவிக்கும் செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாக இது இடம்பெற்றது.

சரிவான நிலங்களில் மண்ணரிப்பை தடுத்து மண்வளத்தை அதிகரிக்கும் நோக்குடன் சரிவுக்கு குறுக்காக அணைகள் அமைத்து அதன் மீது தேசிக் கன்றுகளை நடுவதற்கான தேசிக் கன்றுகளும் மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தால் இலவசமாக விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.





# மாணவர்களுக்கு இலவச பாதணி வவுச்சர் வழங்கும் நடவடிக்கை கிழக்கில் அரம்பம்

(எஸ்.கீதபொன்கலன்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்குப் பார்வைக்கு அமைவாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவின் வழிகாட்டலின் கீழ் கிழக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாதணி வவுச்சர்களை வழங்கும் செயல்பாடு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் திருகோணமலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாணம் முழுவதிலும் உள்ள தெரிவு செய்யப்பட்ட 677 கிராமியப் பாடசாலைகளைச் சேர்ந்த ஒரு லட்சத்து 57 அயிரத்து 698 மாணவர்களுக்கு தலா 3000 ரூபா பெறுமதியான இலவச பாதணி வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளன.



# சிலாபத்தில் நடமாடும் சேவை; காணிப் பத்திரங்கள் வழங்கல்!

(ரஸீன் ரஸ்மின்)

வடமேல் மாகாண ஆளுநர் அலுவலகமும், புத்தளம் மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த சிலாபம் தேர்தல் தொகுதிக்கான விஷேட நடமாடும் சேவை மாதம்பை கருக்குவ சுகதானந்த மஹா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மாகாண ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்த பெரேரா, புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான அலி சப்ரி ரஹீம் உட்பட அரசியல் பிரமுகர்களும், அரச திணைக்கள பிரதானிகளும், அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது, சுவர்ண பூமி காணி உறுதிகள் வழங்கப்பட்டன. இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் அமர்வும் இடம்பெற்றது. தொடர்ந்து தொழில் முனைவோருக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பாடசாலை மாணவர்களுக்கான புலமை பரிசுகள், விசேட தேவையுடையவர்களுக்கான உபகரணங்கள், வயோதிபர்களுக்கான மூக்கு கண்ணாடிகள், ஆயுள்வேத மருத்துவ ஆலோசனைகள், வறிய குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள், கர்ப்பிணி பெண்களுக்கான போஷாக்கு உணவுகள் என்பனவும் வழங்கப்பட்டன.



# ஹெல்ப்பவர் பவுண்டேசனால் மட்டக்களப்பில் இரத்ததானம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இரத்தத் தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில், 'உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம்' எனும் தொனிப் பொருளில் மட்டக்களப்பு ஹெல்ப்பவர் பவுண்டேசன் தனது 5 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இரத்ததான முகாம் ஒன்றை நடத்தியது.

இதன்போது ஹெல்ப்பவர் பவுண்டேசன் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என 91 பேர் இரத்த தானம் செய்தனர்.

இவ்வாறு இரத்த தானம் வழங்கியவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இரத்த தான நிகழ்வில் மட்டக்களப்பு வைத்தியசாலை வைத்தியர், மற்றும் தாதியர்கள் இரத்தம் சேகரித்தமை குறிப்பிடத்தக்கது.






# பிராந்திய மக்களின் சுகாதார மேம்பாட்டுக்காக உழைப்பதற்கு அனைவரும் முன்வாருங்கள்!

**கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சஹிலா இஸ்ஸடீன் தெரிவிப்பு**

(ஆதம்)

கல்முனை பிராந்திய மக்களுக்கு சிறந்த சுகாதார சேவையை வழங்குவதற்கும் அப்பிராந்திய மக்களின் சுகாதார மேம்பாட்டுக்காக உழைப்பதற்கும் சகல தரப்பினரும் தன்னுடன் கைகோர்த்து செயற்பட வேண்டும் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சஹிலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையேற்ற வைத்திய கலாநிதி திருமதி சஹிலா இஸ்ஸடீன் உத்தியோக பூர்வமாகத் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வின்போது உரையாற்றுகையிலே அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐம்பதுக்கும் மேற்பட்ட சுகாதார நிறுவங்களையும், ஐந்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தொகையினையும் உள்ளடக்கிய ஒரு பொறுப்பு மிக்க நிறுவனமாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை காணப்படுகிறது.

இந்தப் பிராந்தியத்துக்கான சுகாதார சேவையை பணிப்பாளரினால் மாத்திரம் வழங்கிவிட முடியாது. இது ஒரு குழு வேலைத் திட்டமாகும். இந்த குழுவில் உள்ள அத்தனை அங்கத்தவர்களும் தங்களுக்கு உரிய பணிகளைச் சிறப்பாகச் செய்வதன் ஊடாகவே இந்த நிறுவனத்தின் ஊடாக சிறந்த சுகாதார சேவையை வழங்க முடியும்.

இது ஒரு சுகாதாரம் சார்ந்த நிறுவனம் என்பதால் இந்த நிறுவனத்தினுடைய பொறுப்பு, பணி மற்றும் குறிக்கோள் ஆகியன மிகத்தீவிரமாக கண்காணிக்கப்பட வேண்டியதாக உள்ளன.

சிறந்த சேவையை வழங்கும் இவ்வாறான நிறுவனத்தில் வேலை செய்யும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் முக்கியமான குணாதிசயங்களை கொண்டிருக்க வேண்டும்.

சுகாதார சேவையானது தியாக மனப்பாங்குடன் மேற்கொள்ளப்படும் ஒரு விடயமாகும். சில வேளைகளில் கடமைக்கு மேலதிகமாகவும் பணி செய்ய வேண்டும். யாவற்றையும் புன்முறுவலோடும், தன்னம்பிக்கையுடனும் ஏற்றுக் கொண்டு மிகச்சிறப்பாக செயலாற்றும் மனப்பக்குவம் சுகாதார துறையினரிடம் காணப்பட வேண்டும்.

சுகாதாரத் துறையைப் பொறுத்த வரையில் எனது நீண்டகால அனுபவம், ஆற்றல், அறிவு இவையே எனது மூலதனமாகும். இவற்றை முன்னிறுத்தி நான் செய்ய விரும்புவது ஒரு பணித் தியாகமாகும். அந்த வகையில் எனது பிராந்திய மக்களுக்கு சேவையாற்றக் கிடைத்திருப்பது பெரும் பாக்கியமாகும்.- என்றார்.

# திருவெம்பாவை ஆரம்பம்!

(வி.ரி.சகாதேவராஜா)

சிவனை நினைந்து அனுஷ்டிக்கும் திருவெம்பாவை விரதம் இன்று (18) திங்கட்கிழமை அதிகாலை ஆரம்பமாகியது.

அதிகாலையில் அம்பாறை மாவட்டத்தில் பரவலாக மழை பொழிந்தது. இருந்தும் இந்துக்கள் 4 மணிக்கு முன்பதாகவே எழுந்து திருப்பள்ளியெழுச்சி ஊர்வலத்திலும் ஆலய திருவெம்பாவை பூஜைகளிலும் கலந்து கொண்டனர்.

இவ்விரதம் தொடர்ந்து 9 நாள்கள் நடைபெற்று 10 ஆம் நாளான 27ஆம் திகதி திருவாதிரை தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

காரைதீவு இந்து சமய விருத்திச்சங்கம் வருடாந்தம் நடத்திவரும் திருவெம்பாவை திருப்பள்ளியெழுச்சி ஊர்வலம் இன்று திங்கட்கிழமை அதிகாலை நடைபெற்றது.

முதல்நாள் ஊர்வலம் நிறைவுற்றதும் திருவெம்பாவை விசேடபூஜை காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் வழிகாட்டலில் சிவஸ்ரீ ரூபன் குருக்கள் பூஜை நடத்தி ஆசியை வழங்கினார். பின்னர் திருவாசகமுற்றோதல் நடைபெற்றது.







# மெய்வல்லுனர் பயிற்றுவிப்பாளர்களுக்கு விசேட பயிற்சிச் செயலமர்வு இலங்கையில்

(எஸ்.கீதபொன்கலன்)

உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மெய்வல்லுனர் பயிற்றுவிப்பாளர்களுக் கான சர்வதே தரம் பெற்ற விசேட பயிற்சிச் செயலமர்வு முதற்தடவையாக இலங்கையில் நடைபெற்றது.

தேசிய ஒலிம்பிக்குழு, இலங்கை மெய்வல்லுநர் சங்கம், இலங்கை பாடசாலைகள் விளையாட்டு சபை என்பவற்றுடன் இணைந்து கல்வி அமைச்சின் விளையாட்டுத்துறை பிரிவால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்தத் தேசிய மட்ட விசேட பயிற்சி நெறி காலி மஹிந்த கல்லூரியில் நடைபெற்றது.

இந்த வதிவிடச் செயலமர்வில் பிரதான வளவாளராக இந்தோனேசிய நாட்டின் ஆசிய மெய்வல்லுனர் மற்றும் பிராந்திய விளையாட்டு அபிவிருத்தி நிலையத்தின் பேராசிரியர் ரியாலுமின்டுறோசோ கலந்து கொண்டு விரிவுரைகளையும், செயன்முறைப் பயிற்சிகளையும் வழங்கினார்.

இந்தச் செயலமர்வில் கடந்த காலங்களில் சர்வதேச மற்றும் தேசிய மட்ட மெய்வல்லுனர் போட்டிகளில் பதக்கங்களை வென்ற வீரர்களைப் பயிற்றுவித்த, தெரிவு செய்யப்பட்ட 52 உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் பங்கு பற்றினர்.

ஆசிய மெய்வல்லுனர் சங்கம் மெய்வல்லுனர்களைப் பயிற்றுவிக்கும் பயிற்றுவிப்பாளர்களுக்கு புதிய நுட்பத் திறன்களை அறிமுகப்படுத்தி, அதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கையில் சர்வதேச தரம் வாய்ந்த மெய்வல்லுனர்களை உருவாக்குவதை பிரதான நோக்காகக் கொண்டு இவ் செயலமர்வை நடத்தியுள்ளது.

நடைபெற்ற இந்தச் செயலமர்வில் திருகோணமலை மாவட்டத்திலிருந்து 3 மெய்வல்லுனர் பயிற்றுவிப்பாளர்கள் பங்குபற்றினர்.

இந்தச் செயலமர்வானது இதற்கு முன்னர் வெவ்வேறு நாடுகளில் நடைபெற்றிருந்த போதும் இம்முறையே முதற்தடவையாக இலங்கையில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெளித்தொடர்புகள் இன்றி வெள்ளத்தில் தனிமைப்படுத்தப்பட்டது சிராட்டிக்குளம்!

(சண்முகம் தவசீலன்)

வெளித்தொடர்புகள் இன்றி வெள்ளத்தால் தனிமைப்படுத்தப்பட்டது முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்டுள்ளது சிராட்டிகுளம் கிராமம்.

பறங்கியாறு பெருக்கெடுத்திருப்பதால் வெளி பிரதேச தொடர்புகள் எதுவுமின்றி இந்தக் கிராமம் பாதிப்படைந்துள்ளது.

இதேவேளை, வீடுகளினுள் வெள்ளநீர் மற்றும் ஆற்று நீர் புகுந்துள்ளமையால் வீடுகளில் கூட உணவுகளை தயார் செய்ய முடியாத நிலைமை காணப்படுகிறது என்று பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் வர்த்தக நிலையங்கள் இல்லாத நிலையில், 7,8 கிலோமீற்றர் தூரமுள்ள நட்டாங்கண்டல் பிரதேசத்துக்குச் சென்றே பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

பறங்கியாறு பெருக்கெடுத்துக் குடிமனைக்குள் பாய்வதால் வைத்தியசாலைக்குக் கூட செல்ல முடியாத நிலைமை காணப்படுகிறது.

கால்நடைகள் கூட வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டுள்ளன. சிலவற்றை இறந்த நிலையில் மீட்டுள்ளனர் என்று கவலை தெரிவித்துள்ளனர்.

சிறு குழந்தைகளுடன் வாழ்ந்துவரும் நிலையில் வீடுகளில் தண்ணீர் தேங்கி வீடுகளைவிட்டு வெளியேற வேண்டிய சூழலில் தாம் உள்ளனர் என்று கவலை தெரிவித்துள்ளனர்.

சிராட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவில் 67 குடும்பங்களை சேர்ந்த 197 பேர் வசித்துவரும் நிலையில் இந்தக் குடும்பங்கள் வெள்ளத்தால் வெளித்தொடர்புகள் எதுவுமின்றி நிர்க்கதியாக் கப்படடுள்ளனர்.





# கல்முனை சீ.எம்.ரீ. கம்பஸ் 161 மாணவருக்குச் சான்றிதழ்!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

மலேசியாவின் மலாக்கா பல்கலைக் கழகத்துடன் கூட்டணிக்கப்பட்ட கல்முனை சீ.எம்.ரீ. கம்பஸில் கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு சீ.எம்.ரீ. கம்பஸ் தவிசாளரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும், அரச வர்த்தகக் கூட்டுத் தாபனத்தின் முன்னாள் தலைவருமான கலாநிதி ஏ.எம். ஜெமீல் தலைமையில் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சான்றிதழ்களை வழங்கினார்.



திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர், தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில், கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி, பேராசிரியர்களான டாக்டர் அப்துல் மஜீத் முஸாதிக், ஏ. ஜௌபர், டாக்டர் எம்.ஐ.எம் கலீல், எம்.எச்.தௌபீக், எம்.ஐ.எம் ஹிலால், எஸ். சப்ராஸ் நவாஸ், சிரேஷ்ட விரிவுரையாளர் ஹபீபுல்லாஹ் உட்பட தென்கிழக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், சிரேஷ்ட அதிகாரிகள், விரிவுரையாளர்கள் மற்றும் கல்வியிலாளர்கள், பிரமுகர்கள், கற்கை நெறியினைப் பூர்த்தி செய்த மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது உயர்கல்வி கற்கை நெறிகளை வெற்றிகரமாக நிறைவு செய்து, சித்திபெற்ற 161 மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.



# திருகோணமலையில் ஒளிவிழா நிகழ்வுகள்!

(அபு அலா)

கிறிஸ்மஸ் தினத்தை முன்னிட்டு ஒளிவிழா நிகழ்வுகள் திருகோணமலை வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் போதகர் கலாநிதி க.முரளீதரன் தலைமையில் நேற்று (17) நடைபெற்றன.



இவ்விழாவுக்கு பிரதம அதிதியாகக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் முன்னாள் செயலாளரும், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபருமான திருமதி ஜே.ஜே.முரளீதரன் கலந்து கொண்டார்.

இதன்போது, போதகர் கலாநிதி க.முரளீதரனால் கருத்துரை வழங்கப்பட்டது.

திருமலை திருச்சபையின் ஓய்வுநாள் பாடசாலை சிறார்களின் கலை கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றன.



# வெள்ளப் பேரிடரால் அவதியுறும் மக்களுக்கு உதவ முன்வாருங்கள்!

(எஸ்.நிதர்ஷன்)

வெள்ள அனர்த்தத்தால் பாதிப்புற்றிருக்கும் மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்கிவைக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் உதவும் உள்ளங்களிடமும், தன்னார்வ அமைப்புகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசத்துக்கு உட்பட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள், வெள்ள அனர்த்தம் காரணமாக தமது இருப்பிடங்களிலிருந்து இடம்பெயர்ந்து, கண்டாவளை மகாவித்தியாலயம், நாகேந்திரபுரம் அ.த.க.பாடசாலை, முரசுமோட்டை அ.த.க. பாடசாலை ஆகிய மூன்று பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

அந்த மக்களை நேரடியாகச் சென்று பார்வையிட்டதோடு, பரோபகாரியும், சமூக ஆர்வலருமான "நளின் ஐவு" நிறுவன உரிமையாளர் சஞ்சீவ் நிதிப் பங்களிப்பில் உலருணவுப் பொதிகளை வழங்கிவைத்தார். இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இடம்பெயர்ந்துள்ள 86 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கும் கண்டாவளைப் பிரதேச செயலர், கிராம அலுவலர்கள், சமுர்த்தி மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து சமைத்த உணவுகளை வழங்கிவருகின்றனர்.

எனினும் அந்த மக்களுக்கான பாய்கள், போர்வைகள், நுளம்பு வலைகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் தேவைப்பாடு நிலவுகிறது.

சமநேரத்தில் பொன்னகர் மற்றும் அக்கராயன் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மக்களும் வெள்ள அனர்த்தப் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர்.

எனவே பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவையான உலருணவுகள், அத்தியாவசியப் பொருள்களை வழங்க முடிந்தோர் நேரடியாக அந்த மக்களுக்கு வழங்கிவைப்பது சாலப்பெரும் பணியாக இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.






# ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான நடவடிக்கை: 4 மாநிலங்களில் 19 இடங்களில் சோதனை!

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினருக்கு எதிரான மற்றுமொரு நடவடிக்கையாக கர்நாடகா உள்பட 4 மாநிலங்களில் 19 இடங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் இன்று சோதனை நடத்தினர்.

தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ், இந்தியாவில் நாச வேலையில் ஈடுபடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகக் கிடைத்த தகவலை அடுத்து அந்த அமைப்புக்கு எதிராக மத்திய அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கடந்த வாரம் மகாராஷ்டிராவில் 40 இடங்களில் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டு, ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய 15 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் ஐ.எஸ். அமைப்பின் முக்கியத் தலைவர் என்பதும், அமைப்பில் புதிதாக சேர்பவர்களுக்கு விசுவாசப் பிரமாணம் செய்து வைக்கக்கூடியவர் என்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.



இதன் தொடர்ச்சியாக, கர்நாடகா உள்பட 4 மாநிலங்களில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் இன்று சோதனை நடத்தினர். கர்நாடகாவில் 11 இடங்களிலும், ஜார்க்கண்டில் 4 இடங்களிலும், மகாராஷ்டிராவில் 3 இடங்களிலும், டெல்லியில் ஓர் இடத்திலும் இந்த சோதனை நடத்தப்பட்டது.

இந்தச் சோதனையில், கணக்கில் வராத மிகப் பெரிய தொகை, ஆயுதங்கள், கூர்மையான கருவிகள், முக்கிய ஆவணங்கள் மற்றும் பல்வேறு டிஜிட்டல் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், வெளிநாட்டு சக்திகளின் உத்தரவுகளின்படி, இந்தியாவில் பயங்கரவாத செயல்களை மேற்கொள்ள இவர்கள் திட்டமிட்டதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

# முகக்கவசம் அணிவது அவசியம்: தமிழக சுகாதாரத் துறை அறிவிப்பு

கொரோனா தொற்று பாதிப்பு அதிகரித்து வருவதால் நோயாளிகள், முதியவர்கள், கர்ப்பிணிகள் முகக்கவசம் அணிந்து கொள்ள வேண்டும் என்று தமிழக பொது சுகாதாரத் துறை இயக்குநர் செல்வவிநாயகம் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று வைரஸ் கடந்த ஓராண்டாக கட்டுக்குள் இருந்து வந்த நிலையில், அண்டை மாநிலமான கேரளாவில் தொற்று பாதிப்பு மீண்டும் அதிகரிக்க தொடங்கியுள்ளது. அங்கு பரவி வரும் வைரஸ் ஜே.என்.1 எனப்படும் புதிய உருமாற்றம் வைரஸ் என கூறப்படுகிறது.

இதையடுத்து தமிழகத்தில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் நோய்த் தடுப்புப் பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அதன் ஒரு பகுதியாக மாவட்ட



துணை சுகாதார இயக்குநர்களுக்கு பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வவிநாயகம் சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார். இதுதொடர்பான அவர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையில், இந்தோனேசியா, தாய்லாந்து, கேரளாவில் கொரோனா பாதிப்பு மீண்டும் அதிகரித்து வருகிறது. இதையடுத்து மத்திய சுகாதாரத் துறை தலைமை இயக்குநர் காணொலி முறையில் அனைத்து மாநில அரசுகளுடனும் விவாதித்தார்.

கொரோனா பரவலைக் கண்காணிக்கவும், பரிசோதனைகள் மற்றும் மருத்துவக் கட்டமைப்பை உறுதிபடுத்தவும் அவர் அறிவுறுத்தினார். அதன்படி, மாவட்ட துணை சுகாதார இயக்குநர்களுக்கு சில முக்கிய உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகிறது.

அறிகுறிகள் உள்ள அனைவருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். கை கழுவுதல், தனி நபர் இடைவெளி போன்ற கொரோனா தடுப்பு முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். நோயாளிகள், கர்ப்பிணிகள், எதிர்ப்பாற்றல் குறைந்தவர்கள் அனைவரும் முகக்கவசம் அணிவதை உறுதி செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

# இண்டியா கூட்டணி நிச்சயம் வெற்றிபெறும்: காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி நம்பிக்கை



எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் இண்டியா கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கொமிட்டி தலைவர் கே.எஸ். அழகிரி தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலியில் செய்தியாளர்களிடம் அவர் கருத்து தெரிவிக்கையில், ”சென்னையில் மிக்ஜாம் புயலால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தற்போது நிவாரணப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. எண்ணூரில் எண்ணெய் கழிவு கடலின் முகத்துவாரப் பகுதிகளில் கலந்ததற்கு, மத்திய அரசின் எண்ணெய் நிறுவன கவனக்குறைவே காரணம். இது தொடர்பாக சுற்றுச்சூழல் துறை முழுமையான விசாரணை நடத்த வேண்டும்.

அண்மையில் நடைபெற்ற 5 மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் வாக்குகள் சதவீத அடிப்படையில் அதிகரித்துள்ளன. தேர்தலில் தோற்றாலும், இண்டியா கூட்டணி கொள்கை பிடிப்புடன் செயல்பட்டு வருகிறது. வரும் மக்களவைத் தேர்தலில் இண்டியா கூட்டணி பெரும்பான்மையுடன் நிச்சயம் வெற்றிபெறும்.

நாடாளுமன்றத்தில் சிலர் அத்துமீறி நுழைந்த விவகாரத்தில், உள்துறை அமைச்சகம் இதுவரை உண்மையான தகவல்களை தெரிவிக்கவில்லை. மேலும், இந்த விவகாரம் குறித்து விளக்கம் அளிக்க பிரதமர் அச்சப்படுகிறார்.

இந்தியாவில் வேலையில்லா பிரச்சினையை போக்க 2 கோடி பேருக்கு வேலை கொடுப்பதாக பிரதமர் நரேந்திர மோடி கூறினார். ஆனால், வேலைவாய்ப்பின்றி இளைஞர்கள் திண்டாடி வருகின்றனர்..” – என்கிறார்.

# மீண்டும் உக்கிரமடையும் உக்ரைன் - ரஷ்யப் போர்!







ரஷ்யா – உக்ரைன் இடையேயான போரில் புதிய முறைமையாக ஆளில்லா விமானங்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும் தாக்குதல் அதிகரித்து வருகிறது.

அதன் படி கடந்த சனியன்று மீண்டும் ஆரம்பமான இந்த ட்ரோன் தாக்குதல் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

ரஷ்யாவின் இராணுவ விமானத் தளத்தைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், தென்மேற்கு ரஷ்யாவின் 3 பிராந்தியங்களில் தாக்குதல் நடத்த வந்த உக்ரைன் ட்ரோன்களில், குறைந்தது 35 ட்ரோன் கள் சுட்டு வீழ்த்தப்பட்டன எனவும் ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், உக்ரைனின் தெற்கு மற்றும் மேற்கு பிராந்தியங்களில் ரஷ்ய இராணுவம் அனுப்பிய 20 ட்ரோன்களும், எக்ஸ்–59 ஏவுகணையும் தாக்கி அழிக்கப்பட்டது.

சுட்டு வீழ்த்தப்பட்ட ட்ரோன் பகுதிகள் கருங்கடல் கடற்கரையில் உள்ள ஒடெசாக் அருகே உள்ள வீட்டின் மீது விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் போர் தொடங்கி இரண்டாம் ஆண்டை நெருங்கும் நிலையில், கடந்த ஒரு மாதமாக ட்ரோன் தாக்குதல்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காசாவில் ஹமாஸ் அமைப்பினரின் சுரங்க வழிப் பாதை கண்டுபிடிப்பு

இஸ்ரேல் பாதுகாப்பு படை வீரர்கள், காசாவில் ஹமாஸ் அமைப்பினரின் மிகப்பெரிய சுரங்க வழிப் பாதை கண்டு பிடித்துள்ளனர்.

குறித்த சுரங்கம், 4 கி.மீ தூரத்திற்கு பரந்து விரிந்து காணப்படுவதாகவும் ஏரிஸ் எல்லை கடப்பு பகுதியில் இருந்து 400 மீட்டர் தொலைவில் ஆரம்பிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அந்த சுரங்க பாதையின் கட்டமைப்பினை இஸ்ரேலிய பாதுகாப்பு படை காணொளி ஆதாரத்துடன் தகவல் வெளியிட்டுள்ளது.

அதேவேளை, அங்கு தேன்கூடு அமைப்பிலான வலைப்பின்னல் சுரங்கப் பாதைக்குள் மின்சார வசதி, தொடருந்து தண்டவாளங்கள், தொலைதொடர்பு நெட்வொர்க் வசதி, கழிவுநீர் வெளியேற்றம், காற்றோட்ட வசதி ஆகியவை வெகு சிறப்பாக செய்யப்பட்டு இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், சுரங்கத்தின் சுவர்கள் வலுவான கொன்கிரீட் பூசப்பட்டு இருப்பதுடன், அதன் நுழைவு வாயில் 1.5 சென்ரி மீற்றர் தடிமன் கொண்ட உலோக உருளை போன்ற அமைப்புடன் வடிவமைக்கப்பட்டு இருப்பதாகவும் இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.



அத்துடன், இந்த கட்டமைப்பை வடிவமைப்பதற்கு பல மில்லியன் டொலர் செலவும், பல ஆண்டுகள் கால அளவும் எடுத்து இருக்கும் என்று இஸ்ரேல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இஸ்ரேல் வெளியிட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், இந்த சிக்கலான வலைப்பின்னல் சுரங்கப்பாதையை வடிவமைத்தவர் ஒக்டோபர் 7 ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலுக்கு மூளையாக இருந்த ஹமாஸ் அமைப்பின் தலைவர் யஹ்யா சின்வாரின் சகோதரர் மொஹமட் யஹ்யா என தெரியவந்துள்ளது.

அதேவேளை, சுரங்கத்தில் இருந்து தாக்குதலுக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் பலவற்றையும் கைப்பற்றி இருப்பதாக இஸ்ரேல் பாதுகாப்பு படை அறிவித்துள்ளது.





# தம்பிலுவிலில் திருவாசக மாநாடு; இந்திய, இலங்கை சுவாமிகள் பங்கேற்பு!

(வி.ரி. சகாதேவராஜா நூருல், ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் எற்பாட்டில் தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கலை அரங்கில் கடந்த மூன்று தினங்களாகத் திருவாசக மாநாடு நடைபெற்றது.

திருவாசக மாநாட்டின் 03 ஆம் நாள் நிகழ்வுகள் தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய கண்ணகி கலையரங்கில் நேற்று (17) ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தவத்திரு சிவாக்கர தேசிய சுவாமியின் அருளுரை, மாநாட்டின் திருவாசக நூல் வெளியீடு என்பவற்றுடன் இவ் ஆண்டுக்கான திருவாசக மாநாடு இனிதே நிறைவடைந்தது.

சமய சமூக ஆன்மிக இறை ஆசி கிடைக்க வேண்டும் என்னும் நோக்குடன் இந்தியாவில் இருந்து சூரியநார் கோவில் ஆதின தவத்திரு சிவாக்கர தேசிய சுவாமிகள் வருகை தந்திருந்தார்.

அவரது வருகையை முன்னிட்டு இந்து ஸ்வயம் சேவக சங்கமும் ஆலயங்களும் மற்றும் இந்து சமய அமைப்புக்களும் இணைந்து திருவாசக மாநாட்டை அம்பாறை மாவட்டத்தில் தம்பிலுவிலில் நடத்தின.

இறுதி நாள் நிகழ்வில் இராமகிருஷ்ண மிஷன் இலங்கை தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்தா ஜீ மகராஜ், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீ மத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தியா சூரியநார் கோவில் ஆதின தவத்திரு சிவாக்கர தேசிய சுவாமிகள் மற்றும் இராம கிருஸ்ண மிஷன் சுவாமிகள் திருவாசகம் தொடர்பான சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார்.

கலாபூஷணம் தம்பிமுத்து மகேந்திரா தலைமையில் திருவாசக மாநாடு இடம்பெற்றது.

இந்த் நிகழ்வில் ஆலய அறங்காவலர்கள், பிரதேச பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.







# திருவெம்பாவையும் மார்கழி மகத்துவமும்!

திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை விரதம் இன்று (18) திங்கட்கிழமை அதிகாலை ஆரம்பமாகியது.

சிவனை நினைந்து வழிபடும் இவ் விரதம் தொடர்ந்து 9 தினங்கள் நடைபெற்று இறுதியில் பத்தாம் நாள் திருவாதிரை தீர்த்தோற்சவத்துடன் திருவெம்பாவை நோன்பு நிறைவடைகிறது.

இந்தக் காலகட்டத்தில் பிரம்ம முகூர்த்த வேளையன அதிகாலை 4-6 மணி வேளையில் ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதுடன், இவ் ஊர்வலத்திலும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல நடராஜப் பெருமானின் அருளைப் பெறுவது இந்துக்களின் வழமையான செயற்பாடாகும்.

நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு ஒரு நாள். தை மாதம் தொடங்கி ஆனி வரை அவர்களுக்குப் பகல் பொழுதாகவும், ஆடி மாதம் முதல் மார்கழிவரை இரவுப் பொழுதாகவும் அமையும்.

அப்படிப் பார்க்கும்போது அதிகாலையான பிரம்ம முகூர்த்தம் மார்கழியில்தான் வருகிறது. தேவர்களுக்கே பிரம்ம முகூர்த்தமாக இருக்கிறபடியால், மார்கழி மாதம் மானிடர்களுக்கும் சிறந்ததாகிறது.

மாதங்களில் நான் மார்கழி என்று பகவான் மகாவிஷ்ணு கூறியுள்ளார். மார்கழி மாதம் தனுர் மாதம் என்று அழைக்கப்படுகிறது. இந்த மாதத்தில் தனுசு ராசியில் குருவின் வீட்டில் சூரியன் குடியேறுகிறார்.

அப்படி சிறப்புகள் நிறைந்த மார்கழி மாதத்தில் அதிகாலையில் குளித்து விட்டு பாவை நோன்பு இருந்ததால் மனதுக்குப் பிடித்த கண்ணுக்கு நிறைந்த கணவன் கிடைப்பார் என்பது நம்பிக்கை.

மகத்துவம் நிறைந்த மார்கழியில் உலக நாட்டங்களைக் குறைத்து, இறைவனிடமும் அவர் திருவடி சார்ந்த செயல்பாடுகளிலுமே மனம் ஒன்ற வேண்டும் என்பதற்காகத்தான் வேறெந்த நிகழ்வுகளையும் நடக்காமல் பார்த்துக் கொண்டார்கள். அதன் வழியொட்டியே மார்கழியில் சுப நிகழ்வுகளைத் தவிர்க்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் அதே நேரம் இறைவனிடம் மனம் லயிக்க வேண்டும் என்பதையும் நினைவில்கொள்ள வேண்டும்.

மார்கழியில் அதிகாலை எழுந்து குளித்து விட்டு வாசல் தெளிப்பதும் மனதுக்கு மட்டுமல்ல, உடலுக்கும் புத்துணர்ச்சி தரும். சூரியனிடம் இருந்து வருகிற ஓசோனின் தாக்கம் மார்கழி



அதிகாலையில் அதிகமாக இருக்கும். இதனால் அதிகாலையில் வெளியே வருவதால் அந்தக் காற்றும், கதிரும் உடலை வலிமைப்படுத்தும் என்பதால்தான் அதிகாலைக் குளியலை முன்னோர்கள் அறிமுகம் செய்திருக்கிறார்கள்.

பெண்கள் அதிகாலையில் நீராடி பாவை நோன்பு நோற்று பெருமாளை வணங்கித் திருப்பாவை பாடுகின்றனர். அந்த கண்ணனே தங்களுக்கு கணவனாக வரவேண்டும் என்பது பல பெண்களின் கனவாக உள்ளது. அனுமன் ஜெயந்தி வருவதும் இந்த மார்கழியில்தான்.

இவ்வளவு சிறப்புவாய்ந்த மார்கழியில் விடியற்காலம் விஷ்ணு சகஸ்ர நாமம் படிப்பது மற்றும் திருப்பாவை படிக்க இறைவன் அருள் கிடைக்கும்.

திருவெம்பாவை மார்கழி மாதத்தில்தான் வருகிறது. சிவனுக்கு உகந்த திருவாதிரை திருவிழா வருகிறது. சிவபெருமானின் பக்தைகள் நோன்பு நோற்பதற்காகத் தோழியை எழுப்பச் செல்லும் காட்சி திருவெம்பாவையிலும் வருகிறது. சிவனுடைய அடியார்களே கணவனாக வர வேண்டும், அவனோடு சேர்ந்து சிவனைத் தொழ வேண்டும் என்பதே திருவெம்பாவையில் வருகிற பாவை நோன்பின் நோக்கம்.

மார்கழி மாண்பு – மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்து குளித்து விட்டு வாசலில் கோலமிடுவது தொன்றுதொட்டு நடந்துவருகிறது. மாட்டுச் சாணத்தில் பிள்ளையார் பிடித்து வைத்து வழிபடுவதும் நடக்கும். மாட்டுச்சாண உருண்டையில் பூசணிப் பூவை செருகி, கோலத்துக்கு நடுவே வைப்பது மார்கழி முழுக்கவே நடைபெறும். சில வீடுகளில் அந்தப் பூ உருண்டையை வரட்டியாகத் தட்டி சேகரித்து சிறுவீட்டு பொங்கலன்று ஆற்றில் விடுவார்கள்.

கல்யாணம் கைகூடும் – அக் காலத்தில், திருமணத் தரகர்களோ, மாப்பிள்ளை – பெண் தேவை என்பதற் காக வெளியிடப்படும் கல்யாண விளம்பரங்களோ கிடையாது. எந்த வீட்டில் பெண் அல்லது பிள்ளை திருமணத்துக்குத் தயாராக இருக்கிறார்களோ, அந்த வீட்டின் வாயிலில் மட்டும் கோலத்தின் மேல் பூசணிப் பூ வைப்பார்கள். ஒட்டு மொத்தமாக எல்லா வீடுகளிலும் வைக்க மாட்டார்கள்.

மார்கழி மாத அதிகாலையில் வீதி பஜனையில் வருபவர்களின் பார்வையில் இந்தப் பூக்கள் தென்படும். விவரத்தைப் புரிந்து கொள்வார்கள். தை மாதம் பிறந்த உடனே பேசி, கல்யாணத்தை முடிப்பார்கள். இதன் காரணமாகவே மார்கழி மாதத்தில் வீட்டு வாயிலில் இருக்கும் கோலத்தில் பூக்களை வைத்தார்கள்.

மார்கழி மகத்துவம் – அதுபோலவே மார்கழி மாதத்தில் பல புராதன நிகழ்வுகளும் நடந்துள்ளன. மகாபாரத யுத்தம் மார்கழி மாதத்தில் நடைபெற்றதாக இதிகாசம் கூறுகிறது. திருப்பாற்கடல் கடையப்பட்டபோது, முதலில் விஷம் எழுந்ததும், சிவன் அதனை உண்டு உலக மக்கள் அனைவரையும் காப்பாற்றியதும் இதே மார்கழி மாதத்தில்தான்.

இந்திரனால் பெருமழை வெள்ளம் உருவாக்கப்பட்டு கோகுலத்தில் அனைவரும் துன்பப்பட்டபோது, கோவர்த்தனகிரி மலையை, கிருஷ்ணர் குடையாகப் பிடித்து மக்களை காப்பாற்றியதும் இந்த மார்கழி மாதத்தில்தான். பக வத்கீதை பிறந்ததும் இந்த மாதத்தில்தான்.

சூடிக்கொடுத்த சுடர்கொடியாளின் மாதம் இது. ஆண்டாளின் பாசுரங்களை தியானித்து பலனை அடைவோம் வாருங்கள்.

**விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா,**
**காரைதீவு**



# மனாரியன்ஸ் பேர்ள்ஸ் அமைப்பால் பூந்தோட்டம் அமைத்து அன்பளிப்பு!

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியில் 2002 ஆம் ஆண்டு சாதாரண தரப் பரீட்சை எழுதிய மாணவர்களின் அமைப்பான மனாரியன்ஸ் பேர்ள் அமைப்பால் தமது வகுப்பு நண்பரான மர்ஹூம் எம்.ஐ.ஏ. ரணீப் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட பூந்தோட்டம் திறந்து வைக்கப்பட்டு கையளிக்கும் நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றது.

அமைப்பின் தலைவர் எம்.ஏ.சி. பைசுல்ஹை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் ஐ.உபைதுல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். பாடசாலையின் பிரதான நுழைவாயில் வரவேற்பு அருகில் சுமார் மூன்றரை லட்சம் ரூபா செலவில் இந்த பூந்தோட்டம் அமைக்கப்பட்டது. மனாரியன்ஸ் பேர்ள்ஸ் அமைப்பின் பெண் அங்கத்தவர்களால் பாடசாலைக்கு தேவையான பசுமை



மற்றும் அழகை பேணும் மரங்களும் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பெண்கள் பிரிவு பொறுப்பதிபர் எம்.எம்.அனஸ், பிரதி அதிபர்களான எம்.சி.நஸார், ஹஸ்மி மூஸா, மனாரியன்ஸ் பேர்ள்ஸ் அமைப்பின் உறுப்பினர்களான ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். மர்ஹூம் எம்.ஐ.ஏ. றணீப் அவர்களின் தாய் திருமதி நுஸ்றா ஆசிரியை, தந்தை முகம்மட் இஸ்மாயில் ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

நிகழ்வுகளை அமைப்பின் ஸ்தாபக தலைவர், ஆசிரியர் எம்.எஸ்.எம். நிஸாம் நெறிப்படுத்தினார்.

# மாணவர்களுக்குச் சின்னம் சூட்டுதல்!





(அஸ்ஹர் இப்றாஹிம்)

பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை, களுவாஞ்சிகுடியில் பாடசாலை முதல்வர் தி.பார்த்தீபன் தலைமையில் சுற்றாடல் முன்னோடி மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் அதிகாரி திருமதி அர்ச்சனா நிசாந்தன், களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர்.ஜே. புவனேந்திரநாதன், பிரதி அதிபர், உதவி அதிபர்கள், ஆசிரியர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.